2010 நவம்பர் 11] [திரு. தி. வேல்முருகன்]

4 மாதங்களாக அனாதைப் பிணமாக அந்த நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பிணத்தைக் கொண்டுவருவதற்கான எல்லாவித முயற்சிகளையும் எடுத்து அந்தக் குடும்பம் மாவட்ட ஆட்சித் தலைவர் முதல், இந்த நாட்டில் இருக்கிற அனைத்து அதிகாரிகளுக்கும் மனு அனுப்பியும் இதுவரையில் அந்தப் பிணம் தமிழகத்திற்குக் கொண்டுவரப்படாமல், இரண்டு பச்சைக் குழந்தைகளை வைத்துக்கொண்டு அந்தக் குடும்பம் தவித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் இருக்கின்றபோது, ஏற்கெனவே என்னுடைய தொகுதியில் இதுபோன்ற ஒரு சம்பவத்தை நான் இந்த அவையில் குறிப்பிட்டபோது, போர்க்கால அடிப்படையில் உடனடியாக முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகம் அதில் தலையிட்டு இறந்தவருடைய அந்த உடலைக் கொண்டுவந்தார்கள். அதேபோல் திரு. பாஸ்கரன் அவர்கள் உடல் 4 மாதங்களாக அங்கு குவைத் நாட்டிலே இருக்கின்ற ஒரு பகுதியிலேயே இப்போது அனாதைப் பிணமாக இருப்பதாக செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு அங்கே இறந்த அந்தத் தமிழர் பாஸ்கரன் உடலைத் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டும். அவருக்கு இரண்டு பச்சைக் குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர், ஒன்று அந்த நிறுவனத்திடம் நம்முடைய தூதரகத்தின்மூலமாகப் பேசி ஏதாவது ஒரு தொகையைப் பெற்றுத் தர வேண்டும் அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து அந்த இரண்டு குழந்தைகளை வைத்திருக்கிற அந்த விதவைத் தாய்க்கு உதவி செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளையும் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

### (ஆ) பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. அன்பழகன். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் பிறகு எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-35*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். எங்களுடைய மாவட்டத்தில் ஓடுகிற பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு இப்பொழுது, கணேசபுரத்தில் 200 கோடி ரூபாயிலே குப்பம் பகுதியிலே ஒரு பெரிய அணை கட்டுவதற்கான உத்தரவுகளையிட்டு, அதற்கான பணி உத்தரவு வழங்கப்பட்டு, அங்கே material-களையெல்லாம் கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள். ஒரு கால்வாயை வெட்டி முடித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடுத்து, அவ்வழக்கும் நிலுவையில் இருக்கின்றது. வனத் துறையினுடைய அனுமதியையும், மத்திய அரசினுடைய அனுமதியையும் ஆந்திர அரசு பெறவில்லை. இப்படி அனுமதி பெறாத சூழலில், அவர்கள் அணை கட்டுவதைத் தடுக்க முற்பட்டபோது அங்கு இருக்கக்கூடிய ஆந்திர அரசினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அவர்கள் நாங்கள் 200 கோடி ரூபாயிலே அந்த அணையைக் கட்டியே தீருவோம், இதிலே யாரும், தமிழக அரசு குறுக்கிடக்கூடாது. அவர்கள் அந்த உச்ச நீதிமன்றத்தில் தொடுத்திருக்கிற வழக்கை வாபஸ் பெற வேண்டும். மீறி ஏதும் வற்புறுத்தினால் நாங்கள் தெலுங்கு-கங்கா திட்டத்தில் விடக்கூடிய தண்ணீரை நிறுத்திவிடுவோம் என்றே ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்கள்.

இப்படி ஆந்திர அரசு ஏற்கெனவே அவர்களுடைய எல்லையில் 30 கிலோமீட்டர் தொலைவிலே 31 தடுப்பணைகளைக் கட்டிவிட்டு, 200 கோடி ரூபாயில் ஒரு பெரிய அணையைக் கட்டிவிட்டார்கள் என்று சொன்னால், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் இவையெல்லாம் குடிநீருக்குக்கூட தள்ளாடுகிற ஒரு நிலை நிச்சயமாக எதிர்காலத்தில் வரும். விவசாயம் முழுமையாக அடிப்பட்டுப் போய்விடும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுத்து, உச்ச நீதிமன்றத்தில் ஒன்று தடையாணை பெற்றாக வேண்டும், இல்லையென்று சொன்னால், ஆந்திர அரசோடு பேசியாவது அங்கே அணை கட்டுகிற அந்த முயற்சியைத் தகர்த்தெறிய

2010 நவம்பர் 11] [திரு. சி. ஞானசேகரன்]

வேண்டும். இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக கணேசபுரத்தில் 200 கோடி ரூபாயில் கட்டப்படுகிற அந்த அணையின் கட்டுமானப் பணியைத் தடுத்து நிறுத்துவதற்கு, நம்முடைய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(இ) பன்னாட்டுத் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் அமைக்க அனுமதி அளித்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி என்ன என்று mention பண்ணி விடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன். தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னையில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தமிழக அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலமாக தொழில்களை வளர்ப்பதற்கு பல ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தொழில் நிறுவனங்கள் தொழில் தகராறு சட்டம், மத்திய அரசால், மாநில அரசால் உருவாக்கப்பட்ட சட்டங்களையே அமல்படுத்துவதில்லை. தொழில் தகராறு சட்டம், குறைந்தபட்சக் கூலிச் சட்டம், தொழிலாளிகள் எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டுமென்பதற்குரிய ஒரு சட்டம். அதுபோன்று contract ஒழிப்பு முறையை கடைப்பிடிக்கக்கூடிய சட்டம், பணியை நிரந்தரப்படுத்துவதற்குரிய சட்டம், இவற்றில் எதையுமே கடைப்பிடிக்காமல் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கு தொழிலாளர்கள் விரும்பக்கூடிய சங்கம் தேவைப்படுகிறது. அந்தச் சங்கத்தினை அங்கீகரிப்பதற்கு அரசினுடைய அனுமதி தேவைப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், ஏற்கெனவே Hyundai Company-ல் வேலை நீக்கம் செய்யப்பட்ட 32 பேர்களுக்கு உடனடியாக வேலை தர வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு, நான்கு மாதங்கள் ஆகியும், அந்தப் பன்னாட்டு